67, [illegible]

Special Quota if any

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்
ந.க.எண். அ1 / 2700 / 2022.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை முதலாம் அணி,
திருச்சி-620012.

தேதி: 08.03.2022

## பணியமர்த்தல் ஆணை

பொருள் : காவல் - 2020ம் ஆண்டு இரண்டாம் நிலை காவலர்கள் த.சி.கா படையில் பணியமர்த்தம் செய்தல் - பணியமர்த்தல் ஆணை - வழங்கப்படுகிறது.

ஆணை

திரு. கோ.விஜய் ஆனந்த், த/பெ. ப.கோபு ஆகிய நீவிர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு குழுமத்தால் நடத்தப்பட்ட 2020-ஆம் ஆண்டுக்கான காவலர் தேர்வு மற்றும் காவல் புலனாய்வு மற்றும் மருத்துவ ஆய்வு ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்டு, த.சி.கா படையில் இரண்டாம் நிலை ஆண் காவலராக பணியமர்த்தம் செய்யப்படுகிறீர்.

2. நீவிர், மேற்படி பதவிக்குரிய அடிப்படை பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது கல்வி, வயது, சாதி ஆகியவற்றின் மூல சான்றிதழ்கள் மற்றும் இதர சான்றிதழ்கள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட பணி நியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்கள் முன்னர் நீவிர் அளித்துள்ள நிழற்பட நகல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். இந்த பணி நியமனத்திற்காக நீவிர் ஏற்கனவே ஒப்படைத்த சான்றுகள் தவறானவை என தெரிய வந்தாலோ அல்லது குற்ற வழக்கில் தொடர்புடையதாக இருந்தாலோ அல்லது குற்ற வழக்கில் தொடர்புடைய விவரங்களை மறைத்து காவல் புலனாய்வு அறிக்கையை பூர்த்தி செய்து, அது பின்னர் கண்டறியப்பட்டாலோ, இந்த பணியமர்த்தல் ஆணை உடனடியாக இரத்து செய்யப்படும் என்பதை அறியவும். காவல் பயிற்சியின் போது உமக்கு ருபாய். 18200 - 57900 என்ற ஊதிய நிலையில் ஊதியமும் மற்றும் நடைமுறையில் உள்ள இதர படிகளும் வழங்கப்படும்.

3. இந்த பதவியில் நீவிர் இரண்டு ஆண்டு கால தொடர் பணியில், ஒரு வருட காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவீர். இந்த தகுதிகாண் பருவத்தில், உமது பணி திருப்திகரமாக இல்லையெனில், பதவி நீக்கம் செய்யப்படுவீர்.

4. அரசு ஆணை பல்வகை எண். 206 உள்(கா.3) துறை, நாள். 07.03.2012-ன் படி நீவிர் ஏழு மாத காலம் பயிற்சிப்பள்ளியில் உறைவிடப் பயிற்சியும், ஒரு மாத காலம் மாவட்டம்/நகரத்தில் நடைமுறைப்பயிற்சியும் ஆக எட்டு மாத காலம் அடிப்படை பயிற்சி பெற வேண்டும். இவை தவிர, சிறப்புக்காவல்/சேமப்படை ஆகிய பிரிவுகளில் பணிபுரிந்து வட்டக்காவல் பிரிவு மாற்றலுக்கு முன் ஒரு மாத கால அறிமுகப் பயிற்சி (Pre-induction Course) காவல் பயிற்சிப்பள்ளியில் பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் உமது நடத்தை, நல்லொழுக்கம் மற்றும் பயிற்சியை மேற்கொள்ளும் திறன் ஆகியவை மீது ஏதேனும் கவனமின்மை, பற்றாக்குறை தென்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவீர்.

NAZARETH COLLEGE OF ARTS & SCIENCE CHENNAI 600 062

Principal
Nazareth College of Arts & Science
Kovilpathagai Main Road, Kannadapalayam,
Vellanoor Post, Avadi, Chennai-600062.